விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 22 திங்கட்கிழமை (08.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

### சர்வதேச நீதிமன்றத்தில்
## இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் திணைக் களத்தின் வரலாற்றில் முதன் முறையாக பொலிஸ்மா அதி பர்கள் உட்பட 15 பொலிஸ் அதிகாரி களுக்கு எதிராக நெதர்லாந்தின் ஹேக்கில் உள்ள சர்வதேச நீதி மன்றத்தில் போர்க் குற்றம் சுமத் தப்பட்டுள்ளதாக சிங் 16

### அரசாங்கத்துக்கு எதிராக
## பொகவந்தலாவையில் பெரும் போராட்டம்



( 03ஆம் பக்கம் பார்க்க )

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
குருப்பெயர்ச்சிப் பலன்கள்

### தரம் 10 – 13 மாணவர்களுக்கான
## கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கோவிட்-19 நோய்த்தொற்றுக் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் இரண்டாம் கட்ட கல்வி நட்வடிக்கைகளை இன்று முதல் ஆரம்பிப் பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளதாக கல்வி 15

### சதொசவில் ஒரு கிலோ சீனி
## ரூ.125

(கொழும்பு)

சதொச ஊடாக ஒரு கிலோ கிராம் சீனியை 125 ரூபா யிற்கு கொள்வனவு செய்ய முடியும் என இரா ஜாங்க அமைச்சர் 15

### கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிப்பு
# மீண்டும் பயணத்தடை அமுல்படுத்த நேரிடலாம்

### சுகாதாரப் பணிப்பாளர்
## அசேல குணவர்த்தன எச்சரிக்கை

*(கொழும்பு)*

*இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் மீண்டும் பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த நேரிடலாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.*

*(15ஆம் பக்கம் பார்க்க)*



## 626 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 626 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 15

## சுவர் இடிந்து விழுந்ததில் தொழிலாளி உயிரிழப்பு
### வவு. ஓமந்தையில் பரிதாபம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பகுதி யில் அமைந்துள்ள ஈயத்தொழிற் சாலையில் பணிபுரிந்த தொழி லாளி ஒருவர் தலையில் சுவர் இடிந்து விழுந்தமையால் பரிதாப கரமாக மரணமடை ந்துள்ளார். 15

## விரைவில் பாடசாலைகள் முழுமையாகத் திறக்கப்படும்
### கல்வியமைச்சர் தினேஷ் உறுதி

(கொழும்பு)

தரம் 6-9 வரையான இடைநிலை தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் கல் வியை மீள ஆரம்பிக்கத் தேவை யான நடவடிக்கைகளை விரை வில் எடுப்பதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

மாணவர்களுக்கு 15

### புதுக்குடியிருப்பில்
## மூன்று பேர் நேற்றுக் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடி யிருப்பு பிரதேசத்தில் புதையல் தோண்ட வந்த சந் தேகத்தின் பேரில் 15

## கொரோனா 15 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 15 மரணங்களுடன் 15

## சீரற்ற காலநிலையால் இதுவரை ஐவர் மரணம்
### 16 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் சில பகுதி களில் கடந்த சில நாட் களாக நிலவும் சீரற்ற 15

## ஆட்சி கவிழக்கூடும்!
### ஆளும் கட்சி உறுப்பினர்கள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

“நாட்டில் ஏற்பட்டுள்ள பொரு ளாதார நெருக்கடி மற்றும் மக்க ளின் வாழ்வாதாரப் பிரச்சினை களை கையாள்வதில் அரசு தோல்விகண்டுள்ளது. கொள் கைகளில் ஏற்பட்ட மாற் றமே இதற்குக் கார 15

# மரண அறிவித்தல்



பிறப்பு
04 - 10 - 1961

இறப்பு
07 - 11 - 2021

## திரு. சுப்ரமணியம் காங்கேஸ்வரன் (ரத்தினம்)
### ( நாதஸ்வர வித்துவான் )

மகாத்மா வீதி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் காங்கேஸ்வரன் (ரத்தினம்) நேற்று (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகனும் பாலகிருஷ்ணன் - பங்கசலீலா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகாங்கியின் அன்புக் கணவரும் அபிநயன், சம்யுதன், சுபஹரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணவேணியின் அன்பு மாமனாரும் பல்லவிசாயினி, ஷாய்சரண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.11.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-2979)

இல. 36, மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

அபிநயன்,
சம்யுதன் (மகன்மார்)
077 923 0607

தகவல் :-
குடும்பத்தினர்

# வடக்கு கரையோரத்தை நோக்கி நகரும் காற்றழுத்த தாழமுக்கம்

(கொழும்பு)

வங்கக் கடலில் அடுத்த 24 மணி நேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது. இது மேலும் வளர்ச்சியடைந்து வடக்கு மாகாண கடற்கரையை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மேலும் இன்று மாலை முதல் மறு அறிவித்தல் வரை தென்கிழக்கு வங்கக் கடலில் மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு மீனவ மற்றும் கடற்படையிடம் வானிலை ஆய்வு மையம் கேட்டுள்ளது.

(ஞா)


## கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் யாழ். கிளை

### கலை வகுப்புகளுக்கான அனுமதி

கிழவன்காடு கலாமன்றத்தின் காரைநகர் மற்றும் யாழ். கிளைகளில் கலை வகுப்புகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளதால் ஏற்கனவே கலைகளை பயிலும் மாணவர்கள் தமது பதிவுகளை உறுதிப் படுத்திக்கொள்வதுடன் புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் தமக்கான அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

அலுவலக நேரம்:- பி.ப 4.00 - 6.00 மணிவரை

நடைபெறும் கலை வகுப்புகள்




01.அறநெறி
02.பண்ணிசை
03.சங்கீதம்
04.நடனம்
05.மிருதங்கம்
06.வயலின்
07.வீணை
08.ஓகன்
09.சித்திரம்



(C-2976)

பதிவாளர்
காரைநகர்
077 015 6244

பதிவாளர்
யாழ். கிளை
077 578 6638

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
## இராசேஸ்வரி செல்லத்துரை
திதி - புரட்டாதி மாத பூர்வபட்ச சதுர்த்தி



தோற்றம்
05 . 08 . 1937

மறைவு
09 . 10 . 2021

தாயெனவே வலி சுமந்து
வாழ்வு தந்த வண்ணம்
கோயிலென நாம் வைத்து
கும்பிட்ட தெய்வம்
வாயிலிலே வைக்கின்ற
பூரண பொற் கும்பம்
போயினவே எல்லாம் ஏன்?
வாழ்வு இது விம்பம்!
ஆயிரம் தான் சொன்னாலும்
அம்மாவுன் எண்ணம்
போயிடுமோ காத்திருப்போம்
உயிர் உள்ள வரைக்கும்...

எமது குடும்பத் தலைவியின் சிவபதப்பேறு குறித்து நாம் துயருற்றிருந்த வேளையில் துணைநின்றவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"வீரகேசரி"
நாவற்காடு, அச்சுவேலி.

(8538)

குடும்பத்தினர்

# அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவோம்

## மனோ எம்.பி. சூளுரை





(கொழும்பு)

**விவசாயத்துறை அமைச்சரின் கொடும்பாவியை மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், வரவு-செலவுத் திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், கொரோனாவுக்கு மத்தியிலும் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்கு கடன் கொடுத்தன. அந்நாடுகள் பொருளாதாரத்தை முகாமை செய்யவில்லையா? அப்படியானால் எமது நாட்டு அரசுக்கு மட்டும் ஏன் தடுமாற்றம்?

தேசிய உற்பத்தியில் புரட்சி செய்யப்போவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்தாலும், இந்த அரசு தோல்வி கண்டுள்ளது. மஞ்சளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது மஞ்சள் கிடைக்கிறதா? என்றால் அதுவும் இல்லை. விவசாய அமைச்சரின் கொடும்பாவியை மட்டும் எரிப்பதை விடுத்து இந்த அரசை வீட்டிற்கு விரட்டியடிக்க வேண்டும் என மனோ தெரிவித்தார். (நி)

## மக்களிடம் பணம் இல்லை என்றால் எங்களால் எதுவும் செய்ய முடியாது

### அமைச்சர் பந்துல

(கொழும்பு)

மக்களின் கைகளில் பணம் இல்லாமைக்கு தன்னால் எதனையும் செய்ய முடியாது எனவும் இது கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக முழு உலகத்திலும் ஏற்பட்டுள்ள பொதுவான நிலைமையே அன்றி, இலங்கைக்கு மாத்திரம் ஏற்பட்டுள்ள நிலைமையல்ல எனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வர்த்தக அமைச்சரான பந்துலகுணவர்த்தன இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சந்தையில் உள்ள விலைகளை விட குறைந்த விலையில் 15 பொருட்களை வழங்கும் போது, அதில் 5 பொருட்களை கொள்வனவு செய்யுங்கள் என்று கோரும் உரிமை ஏன் இருக்கக் கூடாது?. அது கோரிக்கை மாத்திரமே. மக்கள் அதனை விரும்பவில்லை என்ற கோரிக்கையை திரும்ப பெறுகிறோம்.

குறைந்த விலையில் பொருட்களை வாங்க முடியாவிட்டால் அதற்கு எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. முழு உலகிலும் உற்பத்திகள் நிறுத்தப்பட்டு, நாடு மூடப்பட்டால், அன்றாடம் வாழ்க்கையை நடத்தும் நபர்களுக்கு தொழில்செய்ய முடியாது போனால், வருமானம் இருக்காது. அரச ஊழியர்கள் மாத்திரமே நாட்டில் நிலையான சம்பளத்தை பெறுகின்றனர்.

ஏனைய பெரும்பான்மையான. மக்கள் வருமானம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள், விவசாயிகள், கட்டடத்தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் தினமும் வாழ்க்கையுடன் போராடி வருகின்றனர்.

அவர்களின் வருமானத்திற்கு கொவிட் 19 தொற்று நோய் தடையாக அமைந்துள்ளது. தொற்று நோய் நிலைமையில், சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகள், சட்டங்கள் என்பன இதற்கு காரணமாக அமைந்துள்ளன.

உலக வரலாற்றில் இப்படி நடந்ததில்லை. யுத்தம், தொற்று நோய் நிலைமைகள் இருக்கும் போது உலகில் இப்படியான நிலைமை ஏற்படும். இது இலங்கைக்கு மாத்திரமான நிலைமையல்ல, முழு உலகத்திற்கும் பொதுவான நிலைமை எனவும் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## 12 ஆம் திகதி வரவு-செலவுத்திட்டம்

(கொழும்பு)

விசேட பாராளுமன்ற அமர்வுகள் இன்று தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையில் ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர்ந்த சனிக்கிழமை உள்ளிட்ட ஏனைய அனைத்து நாட்களிலும் நடைபெறும்.

அதேபோல் எதிர்வரும் 12 ஆம் திகதி நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளார்.

மேலும், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாதத்தை செவிப்புலனற்ற நபர்களுக்காக சைகை மொழியிலும் வழங்குவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து சபாநாயகரின் ஆலோசனைக்கு அமைய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதுடன், இதற்கமைய வரவு-செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு சமாந்தரமாக சைகை மொழிக்குத் தனியானதொரு கட்டமொன்றை வழங்குவதற்கும் இங்கு அனுமதி வழங்கப்பட்டது. (நி)

## வரிச்சலுகையை பயன்படுத்தி தரமற்ற எண்ணெய் இறக்குமதி

### பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வரிச்சலுகையை பயன்படுத்தி தரம் குறைந்த தேங்காய் எண்ணெயை நாட்டிற்குள் கொண்டுவருவதற்கு இறக்குமதியாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என அனைத்து பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாங்கள் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியை கோரினோம். அரசாங்கம் அதற்கான அனுமதியை வழங்குவதை தாமதிக்கின்றது எனக்கூறினார்.

இந்நிலையில் இறக்குமதியாளர்கள் தற்போது தர மற்ற தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய முயல்கின்றனர் எனவும் ஐம்பது வீத வரிச்சலுகையை கோரியுள்ளனர் எனவும் புத்திக டி சில்வா தெரிவித்தார். (நி-5)




# இன்று 08.11.2021 சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்...

இன்னும் பார்த்துக் கொண்டிருந்தால் என்னாவது ஈசுர விநாயகரே!
மேலும் தாமதம் ஏனப்பா - காக்காப்பிள்ளையாரப்பா!!

❖ அரசியல் போராட்டம் ❖ ஆயுதப்போராட்டம் ❖ ஆன்மிகப் போராட்டம்

30 ஆண்டுகள் எனது ஆன்மிகப் போராட்டத்தில் பூர்த்தி வழிபாடுகள் ஈசுர விநாயகரிடம் மனுத்தாக்கல் செய்தமை (08/11/1991)
அன்றைய மனுவின் முக்கிய கோரிக்கைகளாவன,
❖ கொழும்பு அரசியல் சூறாவளி ❖ இடைக்கால சமாதான அரசியல் தீர்வு ❖ இடம்பெயர்ந்து அலைந்து திரியும் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டும்.

காலம் : இன்று (08/11/2021) திங்கள் விநாயக சதுர்த்தி
நேரம் :- பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகி விசேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் சுவாமி வீதியுலா நடைபெறும்.

ஐயாவின் நீண்ட நாள் கோரிக்கைகளை
நிறைவேற்றிட இன்று எழுந்திடுவீர்
அருள் தந்திடுவீர் சர்வ வல்லமை பொருந்திய
ஈசுர விநாயகரே! உம் திருப்பாதம்
போற்றி! போற்றி!! போற்றி!!! (8541)

சோழியூரான் பிறைசூடிக்குரு
ஆன்மிக வாதியும் சந்ததிப் பூசகரும்
(ஆலயப் பரிபாலகரும் மனுதாரரும்)

# மரண அறிவித்தல்



## கந்தையா லோகநாதன்

**பிறப்பு : 02.01.1956**

**இறப்பு : 05.11.2021**

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா லோகநாதன் கடந்த 05.11.2021 (வெள்ளிக்கிழமை) அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் நவமணிதேவியின் அன்புக் கணவரும் லோஜனா (லண்டன்), புவிராஜ் (லண்டன்), கரீஸ்பராஜ் (பிரான்ஸ்), பகிராஜ் (லண்டன்), தனோசன் (லண்டன்), சோபநாத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயம், நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜன்சிகா, தஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.11.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2981)

அரசடி றோட்,
சாவகச்சேரி.

0033625506467
077 963 1832

தகவல்:
குடும்பத்தினர்

# இராசிபலன்

08.11.2021
ஐப்பசி 22, திங்கட்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 6.40 மணிவரை
மூலம் பின்னிரவு 12.26 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சந்திராஷ்டமம்: கார்த்திகை, ரோகிணி,
சதுர்த்தி விரதம்.

வளவன்


மேஷம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், அல்லல்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பணப் பற்றாக்குறையுண்டு, திருடர் பயமுண்டு.


மிதுனம்

ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் எண்ணம் உருவாகும், உடல் நலம் பற்றிய கவலை உருவாகி மறையும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.


கடகம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


சிம்மம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.


கன்னி

விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.


துலாம்

சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள்.


விருச்சிகம்

தொழில் வளர்ச்சி கூடும், நண்பர்களின் ஒத்துழைப்பால் நலன் காண்பீர்கள், அனைத்திலும் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.


தனுசு

சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.


மகரம்

குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப விரயங்கள் கூடும் நாள்.


கும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்,, போசன சுகமுண்டு.


மீனம்

மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

அழகை இரசிக்க கண்கள் ஆசைப்படுவது இயற்கையே

# பேருந்து-வான் நேருக்கு நேர் மோதி விபத்து

## இருவர் காயம்



(புத்தளம்)

நொச்சியாகம - செட்டிக்குளம் வீதியின் ஓயாமடுவ பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

புத்தளத்தில் இருந்து நேற்று அதிகாலை ஓயாமடுவ வீதி ஊடாக மன்னாரை நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து, எதிர்த்திசையில் இருந்து பயணித்த வான் ஒன்றுடன் மோதி விபத்து இடம்பெற்றது.

விபத்தில் வான் சாரதியும் அவருக்கு அருகில் இருந்து பயணம் செய்த ஒருவரும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பில் ஓயாமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)


# 6ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 . 04 . 1941

இறப்பு 08 . 11 . 2015



அமரர். முத்தர் திருநாவுக்கரசு

உழைப்பின் உன்னதத்தை
எமக்குணர்த்திய எம் அப்பாவே
நீங்கள் மறைந்து ஆறாண்டாகியும்
உங்கள் நினைவுகள்
எம் மனங்களில் இருந்து
மாறவில்லை அன்புத் தெய்வமே

கராஜ் லேன்,
சண்டிலிப்பாய்.

(8540)

மனைவி,
பிள்ளைகள்.



## மாவட்ட செயலக சிற்றுண்டிச்சாலை கேள்வி கோரல் 2021/2022
## மாவட்ட செயலகம் கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட செயலக சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 19/11/2021 ஆம் திகதிவரை கோரப்படுகின்றது.

பதிவு நிபந்தனைகள், கட்டண விபரங்கள், மாதிரி விண்ணப்ப படிவம் என்பவற்றை மாவட்ட செயலக நிதிக்கிளை மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களில் அலுவலக நாட்களில் 19/11/2021 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலக பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். 021228 5352, 021228 5309

திருமதி.றூ.கேதீஸ்வரன்
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி.

(C-2961)

## வெளி இடங்களிலிருந்து

# மேய்ச்சலுக்காக கொண்டு வரப்படும் கால்நடைகளால் மேலும் நெருக்கடி

## விவசாயிகள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேய்ச்சலுக்காக வெளியிடங்களில் இருந்து கால்நடைகள் கொண்டு வருவதை தவிர்க்க வேண்டும் என பிரதேச விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வெளியிடங்களில் இருந்து தற்போது பெருமளவான கால்நடைகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு வரப்படுகின்றன.

இதனால் குறித்த பிரதேசங்களில் கால்நடைகளால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன.

குறித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாய செய்கைகள் மற்றும் மீள் நடுகை செய்யப்பட்ட தென்னை மரங்களையும் குறித்த கால்நடைகள் அழித்து வருவதாகவும் தென்னை செய்கையாளர்கள் தெரிவித்திருக்கும் அதே வேளை தங்களுடைய பிரதேசத்தில் இருக்கின்ற கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகள் இல்லாத நிலையில் வெளியிடங்களில் இருந்து கால்நடைகளை தமது பிரதேசங்களுக்கு கொண்டு வருவது மேலும் நெருக்கடி நிலையைத் தோற்றுவித்து இருப்பதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)



வைத்திய கலாநிதி சக்தி வடிவேல் சக்திபாலனின் 31 ஆவது நாள் நினைவேந்தல் வலி.மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. மன்னார் பொது வைத்தியசாலையில் பணியில் இருந்த வேளை ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக கடந்த 06.10.2021 அன்று மரணமானார்.

இந்த நிலையில் அவரது 31 ஆவது நாள் நினைவேந்தலில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், பேராசிரியர்கள், கல்விமான்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(படம்:-கஜிந்தன்)

# வழிபாடுகளை வீடுகளில் மேற்கொள்ளுங்கள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கொரோனாத் தொற்று நோய் அபாய நிலை முற்றாக நீங்காத சூழ்நிலையில் பொதுமக்கள் பூசைகளுக்காக ஓரிடத்தில் ஒன்றுகூடுவது நோய்த் தொற்றை அதிகரிக்கும் சூழலை ஏற்படுத்தும் என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார்.

எனவே தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் தற்போது இடம்பெற்று வரும் கந்தசஷ்டி விரத பூசைகளில் வெளியிடங்களில் இருந்து பக்தர்கள் வருகை தந்து கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்வதுடன் முருகப் பெருமாள் அடியார்கள் வீடுகளிலிருந்து வழிபடும் படிவும் கேட்டுக் கொண்டார். (4-5)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி ஆனந்தபுரம் ஜெய துர்க்கை அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் முத்தமிழ் குருமாமணி சிவஸ்ரீ. அமிர்த. இலசுமிகாந்தக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)

# யாழ். மாவட்ட கலைஞர்களுக்கும் அமைச்சர் விதுரவிற்குமிடையே சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த கலைஞர்களுக்கும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலின் போது யாழ்ப்பாணக் கலைஞர்கள் தாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சரிடம் தெரிவித்தனர்.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கலைஞர்களுக்கான கலைஞர் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்என்றும்தற்போதைய சூழ்நிலை காரணமாக வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட கலைஞர்களுக்கு அரசின் உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதன்போது அமைச்சர் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக பதிலளித்தார். (4-33)

# போதைப் பொருளுடன் துன்னாலையில் பெண் கைது

(கரணவாய்)

துன்னாலை பகுதியில் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் நேற்று முன்தினம் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பெண்ணைக் கைது செய்தனர். (5-4-60)

# கொக்குவிலில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கேணியடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேரால் இளைஞர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டது.

கை, கால் பகுதிகளில் காயமடைந்த குறித்த இளைஞர் அங்கிருந்து மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர். (4-5-33)

# பல்சமய கருத்தாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சமூக முன்னேற்றத்திற்கான செயற்றிட்டம் தொடர்பான கருத்தாடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.பொதுசன நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளார். (4-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 140 | 120 |
| தக்காளி | 350 | 420 | 300 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 200 | 140 | 160 | 200 |
| கரட் | 160 | 250 | 270 | 280 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 250 | 240 | 160 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 240 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 180 |
| பாகற்காய் | 450 | 450 | 270 | 400 |
| வெண்டிக்காய் | 160 | 120 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 350 | 400 | 360 | 300 |
| லீக்ஸ் | 200 | 240 | 240 | 300 |
| பீற்றூட் | 120 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 280 | 350 | 320 | 320 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 150 | 200 |
| போஞ்சி | 350 | 350 | 320 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 170 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 500 | 400 | 450 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | -- | 350 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 140 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | 100 |



மண்டைதீவு புனித பேதுரு வானர் முன்பள்ளியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று திறந்து வைத் தார். மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் புலம் பெயர் உறவுகளின் நிதிப்பங் களிப்பில் குறித்த முன்பள்ளிக் கட்டடம் அமைக்கப்பட்டது. இந் நிகழ்வில் மண்டைதீவு பேதுரு வானர் ஆலய பங்குத் தந்தை அருட் தந்தை அந்தோனிதாஸ் மற்றும் அருட் சகோதரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஒரே நாடு ஒரே சட்டம்

# செயலணியை ரத்து செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற செயலணியை இல்லாதொழிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுபல சேனா அமைப்பின் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணியானது தேசிய ஒற்றுமையை சீர்குலைத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள் ளது.

செயலணியொன்றை நியமித்து, அமைச்சரவையில் விவாதிக்காமல், நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபரின் அதிகார வரம்பில் இருந்து நீக்கும் நடவடி க்கை "கேலிக்குரியது" என்றும் ஜனாதிபதியின் அரசியலமைப்பிற்கு முரணான செயல் என ஐ.தே.கட்சி அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனவே, நாட்டின் ஒற்றுமைக்கு பாதகமான ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியை உடனடியாக இல்லா தொழிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோருகின்றோம் என ஐ.தே.க தெரிவித்தது. (நி-5)


## பெறுகை அறிவித்தல் நகராட்சி மன்றம், சாவகச்சேரி

தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்களினால் 01.01.2022 ஆம் திகதி தொடக்கம் 31.12.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/41(3)1/O.S/01/2022 | பாதுகாப்புசேவை | 09 | **37,900.00** | **21.02.2022** |
| NP/14/41(3)1/O.S/02/2022 | சுத்திகரிப்புசேவை | 12 | **50,500.00** | **07.03.2022** |
| NP/14/41(3)1/O.S/03/2022 | சாரதிசேவை | 02 | **8,800.00** | **07.02.2022** |

01. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்குஅமைவாகவே இக்கேள்வி கோரப்படுகின்றது.
02. தனியார் சேவை வழங்குநர்கள் சேவையை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.அத்துடன் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
03. சேவைவழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ளபெறுகைதாரர்கள் தலைவர்,பெறுகைக்குழு,நகராட்சி மன்றம் ,சாவகச்சேரி தொலைபேசி இல: 021 227 0498 தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல் chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் **08.11.2021 ஆம்** திகதி **தொடக்கம் 22.11.2021 ஆம் திகதி** வரை 9.00 மணிமுதல் 15.00 மணிவரை பெறுகை ஆவணங்களை பார்வையிடலாம்.
05. சேவை வழங்குநர்கள் நகராட்சி மன்றஅலுவலகத்தில் அலுவலக நாட்களில் **08.11.2021 ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் 22.11.2021 ஆம் திகதி மு.ப 10.00** வரைமீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக ரூபா 1,000.00 (**VAT,NBT** நீங்கலாக) இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
06. பெறுகை ஆவணங்கள் **22.11.2021** ஆம் திகதி 10.30 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.
08. பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
09. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் **16.11.2021** ஆம் திகதி 10.00 மணிக்கு சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**திருமதி சிவமங்கை இராமநாதன்,**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**
**08.11.2021**

(C-2962)



## மணமகள் தேவை

கப்பலில் பணிபுரிந்து விடுமுறையில் நிற்கும் 35 வயது உத்தர நட்சத்திரம் உடைய இந்து கௌரவ மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு:
077 407 5043

(8523)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகத்தில் இயங்கிவரும் விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லமாகிய வாழ்வக நிறுவனத்தின் வாழ்நாள் தலைவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய

**உயர்திரு ஆறுமுகம் ரவீந்திரன்**

அவர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்படும் உயரிய விருதான **"யாழ். விருதினை"** இவ்வாண்டு பெற்றுக்கொண்டமையினை முன்னிட்டு வாழ்வக சமூகம் பெருமிதம் அடைவதுடன் அவரின் ஈடிணையில்லா பணி மேன் மேலும் சிறக்க வாழ்வக அன்னை அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் பாதம் பணிந்து இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம். இவ்வுயரிய விருதினை எமது தலைவருக்கு வழங்கி கௌரவித்த யாழ்ப்பாணம் மாநகர சபை சமூகத்தினர் யாவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

(C-2974)

**வாழ்வக சமூகம்**
**வாழ்வகம்,சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்**



## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் வாகன சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்வி விலை கோரல்-2022

01. யாழ். போதனா வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவரினால் 2022ம் வருடத்திற்கான யாழ். போதனா வைத்தியசாலை வாகனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவையினை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. கேள்வி மனுதாரர் வாகன சுத்திகரிப்புச் சேவைக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தின் பிரதியுடன், கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 ஐ யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகக் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பங்களை 09.11.2021 முதல் 23.11.2021 வரை மு.ப. 9.00- பி.ப.3.00 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலை அலுவலக அறையில் பெற்றுக் கொள்ளலாம்.
03. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக் கூடிய வைப்புக் கட்டணமாக **(Bid Bond)** ரூபா 50,000.00 ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
04. கேள்வி விண்ணப்பங்களின் மூலப் பிரதியினை தயார்செய்து தபாலுறையிலிட்டு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் **"வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல்-2022"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 24.11.2021 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.
06. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே அவை அவ்விடத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
07. கேள்வி ஆவணங்களை யாழ். போதனா வைத்தியசாலை அலுவலக அறையில் இலவசமாகப் பார்வையிடலாம்.
08. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
09. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவைச் சார்ந்தது.
10. மேலதிக விபரங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியசாலைச் செயலாளரை 021 222 7764 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர், பிராந்திய பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(C-2965)

# கிளாஸ்கோவின் மிகப்பெரிய போராட்டம்




(கிளாஸ்கோ)

காலநிலை நெருக்கடி குறித்து மேலும் நடவடிக்கை எடுக்கக் கோரி கிளாஸ்கோவில் சுமார் ஒரு இலட்சம் பேர் போராட்டத்தில் ஈடுபட்டதாக அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

காலநிலை மாற்றம் தொடர்பான கோப்-26 உச்சி மாநாட்டின் போது நடந்த மிகப் பெரிய எதிர்ப்புப் போராட்டம் இது என்பதோடு உலகம் முழுவதும் இதேபோன்ற நூற்றுக்கணக்கான போராட்டங்கள் இடம் பெற்றுள்ளன. (நி-5)

# 50 கிலோ மலைப்பாம்பை தோளில் சுமக்கும் நபர்


## வைரலாகும் வீடியோ



நபர் ஒருவர் மலைப் பாம்பை தனது தோளில் சுமந்து கொண்டு நடக்கும் வீடியோ இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

50 கிலோவுக்கு மேல் எடையுள்ள அந்த மலைப்பாம்பும் அந்த நபருக்கு எந்தவித பிரச்சினையையும் அளிக்கவில்லை. அந்த மலைப்பாம்பு அவரது கட்டளைப்படி தோள்களில் இருந்து இறங்கி தரையில் ஊர்ந்து செல்லத் தொடங்குவதை வீடியோவில் பார்ப்பது மிகவும்அதிர்ச்சியாகஉள்ளது. இதனை இணையவாசிகள் வைரலாக்கி வருகின்றனர். (நி-5)

# மகாராஷ்டிரா மருத்துவமனையில் தீ விபத்து - 11 பேர் உயிரிழப்பு



(டெல்லி)

மகாராஷ்டிராவின் அஹ்மத் நகரில் உள்ள அரச வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்ததுடன் 4 பேர் காயமடைந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)

# நல்லூர்க் கந்தன் நமக்குத் தந்தருளிய அறங்காவலர் குமாரதாஸ் மாப்பாணர்

சித்தர்கள் வாழ்ந்த சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத்தீவின் வட திசையில் சைவத் தமிழ் பண்பாடுகளை போற்றிக்காத்துவரும் யாழ்ப்பாணப் பெரும் நகரில், இலங்கை மக்களும், தேசம் கடந்த மக்களும், இன, மத, மொழி,வயது வேறுபாடின்றி ஆலய வழிபாட்டுக்காகத் தேடி ஓடிவருகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாக மிளிரும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் அரும் தூய பணியை வம்சமரபுப்படி மாப்பாண முதலியார் பரம்பரை தொடர்ந்து நெறிப்படுத்தி வருகின்றது.

நல்லூர் ஆறுமுகனே இவர்களைத் தன் பணிக்கென அருளாசி வழங்கி உறுதுணையாக நின்று செயற்பட வைக்கின்றார். அவை தொடர்ந்து இறை வெற்றியுடன் நிறைவேற்றப்படுகின்றது என்பதில் ஐயமில்லை.

நல்லூர்க் கந்த சுவாமியார் கோயில் அறங்கர்வலர் அமரர். குகஸ்ரீ.இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள்,முருகனுக்கே தன்னை அர்ப்பணித்து முழு நேரமும் அளப்பரிய தூய பணிகளை செய்தார்.

நல்லூர்க்கந்தனின் கட்டளைப்படி 1964 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 15 ஆம் திகதி முதல் முருகன் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார்.


ஆறுமுகனை விட, எவருக்கும் அஞ்சாத ஆளுமை உடையவர். தான் திட்டமிட்ட திருப்பணிகளை, புனருத்தாரண வேலைகளை நினைத்த படியே நிறைவேற்றி முடிப்பார்.

நல்லூர் அலங்காரக்கந்தனின் கருவியாக அமையப் பெற்ற உன்னத சேவையாளனாக அவர் விளங்கினார்.

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான கட்டடங்கள் அனர்த்த காலத்தில் அழிந்ததினால் தற்காலிகமாக ஓர் இடம் தேவைப்பட்டபோது, குகஸ்ரீ.குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான காணியை யாழ். மாநகர சபைக்கு இலவசமாக வழங்கி யாழ். மாநகர சபையின் இயங்குநிலைக்கு பேருதவி புரிந்தவர்.

அமரர். குகஸ்ரீ.குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள் வம்சமரபுப்படி பத்தாவது அறங்காவலராக இருந்து, உலகப் புகழ் பெற்ற அலங்காரக் கந்தனின் நிர்வாகப் பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து தெய்வீகச் சிறப்பைத் தரும் கோபுரங்கள் மற்றும் புனருத்தாரண வேலைகளை தற்துணிவுடன் நிறைவேற்றிய பெருமைக்குரியவர்.

இப் பெருந்தகையின் சேவைகளை ஆய்வு செய்யும் போது அறங்காவலர்களில் பெரும் சேவையாளராக கந்தனால் உருவாக்கப்பட்ட முதன்மையான அறங்காவலராக அவரை நாம் போற்ற முடியும்.



இவரின் நிர்வாகத்தின் தொடராக குடும்ப வாரிசுகளையும் ஒருவருக்கு ஒருவர் என்ற மரபுமுறைப்படி முருகன் ஆக்கியும் வைத்துள்ளார்.

இறை மகிமையுடன் அரும்பணியாற்றிய பெருமகனார், தனது மகனை கட்டடக் கலைஞராக்குவதற்கு விரும்பினார். தந்தையின் விருப்பப்படி மகனும் கட்டடக் கலைஞர் ஆனார்.

எத்தகைய நெருக்கடிகள் வந்த போதிலும் நல்லூர்க் கந்தப்பெருமானின் திருவிழாக்கள் இடையறாது தொடர்ந்து நடைபெறுவதை குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் தனது முதுமை நிலையிலும் நிறைவேற்றினார் என்பதற்குள் முருகப்பெருமானின் வழிகாட்டல் அவருக்கு நேரடியாக இருந்தது என்பதை நாம் அறுதியிட்டுக்கூற முடியும்.

இத்தகு பெருமைக்குரிய அறங்காவலர் குமாரதாஸ் மாப்பாணர் வளர்பிறை சதுர்த்தி விரதநாளில் (09-10-2021 ஆம் திகதி சனிக்கிழமை) நல்லூர் கந்தப்பெருமானின் திருவடியை அடைந்தார்.

வளர்பிறை ஷஷ்டி விரத நாளில் அவரது அஸ்தி கங்கையில் சேர்க்கப் பட்டிருக்கும். அவரின் ஆத்ம ஈடேற்றத்திற்காக தமிழகத்திலுள்ள தில்லைச் சிதம்பரத்தில் அமைந்த தென்கோபுரத்தில் மோட்ச தீபம் ஏற்றப்பட்டது என்ற செய்தி உலகம் முழுமைக்கும் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாணரின் பெருமையை எடுத்துரைக்கின்றது.

குகஸ்ரீ.குமாரதாஸ் மாப்பாண முதலியார் பரமாஸ் வெள்ளைவேட்டி சால்வை அணிந்து , திருநீற்று மேனியுடன் எந்தவித ஆடம்பரமும் இன்றி பக்தர்களோடு பக்தராக நின்று ஆலயத்தை கட்டி வளர்த்த பேராளனாய், அடியவர்கள் தங்கள் நிலைக்கேற்ப மனம் தளராமல் ஒரு ரூபா தர்ச்சனையுடன் அர்ச்சனை செய்யக் கூடிய சமதர்மத்தை ஈந்த பெருந்தகையாய் விளங்குகின்றார். அவரின் சாதனைகளைச் சொல்லி முடிக்க முடியாது.

மனிதன் பிறக்கின்றான், இறக்கின்றான். பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள இடைக்காலத்தில் வாழும் வாழ்க்கையே மனிதனை மறக்க முடியாத மாமனிதனாக மாற்றிவிடுகின்றது.

“மனிதன் நல்ல காரியங்களைச் செய்துவிட்டே மரணிக்க வேண்டும்” என்ற உறுதிதான் இவர் வாழ்க்கை. அவர் மறைந்தாலும் அவர் பதித்துச் சென்ற சுவடுகள் என்றும் அவர் பெயரை நினைவூட்டியபடி தொடரும் என்பது சர்வ நிச்சயம்.

புகழை விரும்பாத தன்னலமற்ற சேவையாளனாகவும், செயல்வீரனாகவும் தவ வாழ்வு வாழ்ந்த அவர், நல்லூர்க் கந்தனை நினைத்தபடியும், தொழுத படியும், கந்தனின் திருவடிகளில் இறை பதமடைந்தார்.அவர் இறைபதமடைந்த 31 ஆம் நாளில் அவரை நன்றியோடு போற்றி வணங்குவோம்.

சி. ஆ. ஏகானந்தசிவம்
ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்.
யாழ்.பி.சு.சே.பணிமனை

# இலங்கையை சிங்கள பௌத்த நாடாக மாற்ற அரசாங்கம் முயற்சி

## சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

**அரசாங்கம் தனது அரசியல் பலத்தையும் படைகளின் ஆதிக்கத்தையும் ஒன்றுதிரட்டி, இலங்கையை சிங்கள பௌத்த நாடு என நிறுவுவதற்கான முயற்சி செய்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குற்றம் சாட்டியுள்ளார்.**



அதன்பிரகாரம் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களில் பௌத்த சிதைவுகள் இருப்பதாகக்கூறி முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வாராய்வுகள் இதற்கு முக்கிய சான்று எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெடுக்குநாறி மலை காரை நகர் என வடக்கு-கிழக்கில் பல பகுதிகளிலும் பௌத்த சின்னங்களும் சிதைவுகளும் இருப்பதாகக்கூறி தொல்பொருள் திணைக்களத்தினால் அகழ்வாராய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் கடந்த காலங்களில் வரலாற்றாசிரியர்களாலும் தொல்லியலாளர்களாலும் நாட்டின் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியான ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்வுக்குச் சம அளவிலான ஆய்வுகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்கள் குறித்த தொல்லியல் சான்றுகளையும் ஆதாரங்களையும் கருத்துக்களையும் வெளியிடுவதற்குப் பலரும் தயங்கும் நிலையில் இவ்விடயங்கள் குறித்தும் கரிசனை கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (4-5)

# போராட்டமே தீர்வு

## சுமந்திரன் எம்.பி.



(பனிக்கன்குளம்)

போராட்டங்களின் மூலமாகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும், அனைத்தையும் சட்டரீதியாக தீர்த்துக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மீனவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

தென்னமரவடிப்பகுதியில் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர்களுடைய வயல் நிலங்கள் தொடர்பாக சட்ட ரீதியாக தீர்வு காணப்பட்டு நீதிமன்ற கட்டளையை பெற்ற போதிலும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்காது இருக்கின்றனர்.

பௌத்த பிக்குகளை தம்மால் கைது செய்ய முடியாது எனப் பொலிஸார் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் கடல் வழியான மீனவர்களின் போராட்டத்தின் பின்னர் இந்திய தூதுவர் மீனவர்களை சந்தித்து கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாகவும் குறித்த சந்திப்பில் சுமந்திரன் தெளிவுபடுத்தினார். (4-5-281)

# ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டத்திற்கு வடக்கிலும் பூரண ஆதரவு

(பனிக்கன்குளம்)

ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சுகயீன விடுமுறை போராட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்குவதாக வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கம் மற்றும் பணியமர்த்தப்பட்ட பட்டதாரிகள் சங்கம் என்பவற்றால் இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்படும் ஒருநாள் சுகயீன விடுமுறை போராட்டத்திற்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஆதரவைத் தெரிவிக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5-30-250-281)

# பழைய முறிகண்டி கிராமத்தில் தொடரும் மணல் அகழ்வு

(அக்கராயன்)

முல்லைத்தீவு பழைய முறிகண்டி கிராமத்தில் நாள்தோறும் மணல் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த பத்தாண்டுகளாக பழையமுறிகண்டி கிராமத்தில் இருந்து மணல் கொண்டு செல்லப்படுகின்றது. இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், துணுக்காய் பிரதேச செயலாளர் உட்பட பல்வேறு தரப்புகளுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இத்தகவல் தெரிவிக்கப் பட்டது. இதன் காரணமாக பழைய முறிகண்டி கிராமம் பெரும் அழிவுக்குள் சென்று கொண்டிருக்கின்றது.

ஆற்றுப்படுகைகளில் தொடர்கின்ற மணல் அகழ்வு பழைய முறிகண்டி குளத்தின் அணைக்கட்டுக்கு அருகாமையில் நிகழ்வதனால் குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்படலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாள்தோறும் கிராமத்தில் இருந்து இரண்டு டிப்பர்களில் மணல் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. பாரவூர்திகள் பயணிப்பதனால் கிராமத்தின் முதன்மை வீதி சேதமடைந்து காணப்படுகிறது. இதனைவிட மணல் அகழ்வினால் பெருமளவு மரங்களும் அழிக்கப்பட்டு வருவதாகவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (4-5-350)

# பழுதடைந்த மின்விளக்குகள் மாற்றப்படவில்லை



(அக்கராயன்)

கிளிநொச்சி கரைச்சி பெரிய பரந்தன் கிராமத்தில் கரைச்சி பிரதேச சபையால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள், ஐந்து மாதங்களுக்கும் மேலாக ஒளிராத நிலையில் காணப்படுவதாக கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் இ.இளங்கோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு குறுகிய காலத் தில் பழுதடைந்தன. ஒளிராத வீதி விளக்குகள் தொடர்பாக சபை அமர்வுகளில் தெரியப்படுத்திய பின் 28 இற்கு மேற்பட்ட விளக் குகள் அகற்றப்பட்டு மூன்று மாதங்கள் கடந்த நிலை யிலும் மீண்டும் பொருத்தப்படவில்லை. பருவப் பெயர்ச்சி மழை தொடங்கியுள்ளதால் அவ் வீதி களால் செல்லும் மாண வர்க ளும் மக்களும் இரவு நேரங்களில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்ற னர். தவிசாளர் இது தொடர்பாக நடவ டிக்கை எடுக்க வேண் டும் எனவும் அவர் தெரிவித்தார். (4-5-350)

# மன்னாரில் கடும் மழை

## விடத்தல்தீவிற்குள் உட்புகுந்தது கடல் நீர்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல்தீவு கிராமத்தில் கடல் நீர் கிராமங்களுக்குள் புகுந்துள்ளது.

இதனால் விடத்தல்தீவு கிராமத்தில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் விடத்தல்தீவு மீனவர்களின் படகுகள் சில சேதமடைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விடத்தல்தீவு கிராமத்திற்குச் சென்று நிலைமையை அவதானித்ததோடு, பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தார். (4-5-285)

# அடிப்படை வசதிகளின்றி காணப்படும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை மற்றும் கண்டாவளை கல்விக் கோட்டங்களை உள்ளடக்கி புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி வடக்கு கல்வி வலய அலுவலகம் பரந்தன் இந்து மகா வித்தியாலய வளாகத்தில் உள்ள பாடசாலை மண்டபத்தில் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது குறித்த அலுவலகத்திற்கான போதிய தளபாட வசதிகள் மற்றும் இதர வசதிகளின்றிக் காணப்படுகின்றது.

எனவே இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிவில் சமூக அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (4-5-315)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022

## மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லும் மேஷ இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், 13.11.2021 முதல் 11 ஆம் இடமான லாப ஸ்தானத்திற்கு வருகிறார். இது வரவை பெருக்கிக் கொடுக்கும் இடமாகும். எனவே தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். வெளிநாடு தொடர்பான வகையில் வெற்றிகரமான தகவல் வந்து சேரும். அடுக்கடுக்காக ஒப்பந்தங்கள் வந்து அலைமோதும். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை கிடைக்கலாம். உடன்பிறந்தவர்களோடு நல்லுறவு ஏற்படும். ஒரு சிலருக்கு கௌரவப் பதவிகளும் தேடிவரலாம். உத்தியோகத்தில் இருந்தபடியே தொழில் செய்யலாமா?" என்ற சிந்தனையும் மேலோங்கும். நினைத்த காரியங்களை நினைத்தபடியே முடிக்கக் கூடிய விதத்தில், இந்த குருப் பெயர்ச்சி அமைகின்றது.

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். அந்த மூன்று இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறும். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் பதிவதால், வெற்றிகள் ஸ்தானம் புனிதமடைகிறது. எனவே தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து மற்றவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். வருமானம் போதுமானதாக இருக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால், பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம்பெறுகிறது. எனவே பூர்வ புண்ணியத்தின் பலனாக, உங்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்தும் கிடைக்கும் நேரம் இது. பழைய கடன்களைக் கொடுத்து மகிழ்வீர்கள்.

கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட வழிபிறக்கும். நிரந்தர வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள். நீடித்த நோய் அகலும். பெற்றோர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும்.

பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ, கல்யாணம் சம்புந்தமாகவோ எடுத்த முயற்சி பலன்தரும். குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால், களத்திர ஸ்தானம் புனிதமடைகிறது.

எனவே இல்லற வாழ்க்கை இனிமையாக அமையும். தம்பதியர்களுக்குள் ஏற்பட்ட பிணக்குகள் அகலும்.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிநாதனாகவும் 8 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் செவ்வாய். இராசிநாதன் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிப்பது யோகம்தான். 'குருமங்கள யோகம்' என்ற அடிப்படையில் மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக பேசி வந்த வரன்கள் இப்பொழுது முடிவாகலாம்.

**ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022 வரை)**

உங்கள் இராசிக்கு லாப ஸ்தானம் எனப்படும் கும்ப இராசியில் இடம் பெற்றிருக்கும் நட்சத்திரம் சதயம். இது ராகுவிற்குரிய நட்சத்திரம். அந்த ராகு பகவான் உங்கள் இராசிக்கு இரண்டாமிடமான தன ஸ்தானத்தில் இருக்கிறார். இக்காலத்தில் தனவரவு




தாராளமாக வந்து சேரும். எதிர்பார்த்தபடி நல்ல வேலை கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும்.

**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022 வரை)**

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். எனவே பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். பிடிவாதக் குணத்தை தளர்த்திக் கொண்டு செயற்படுவது நல்லது. உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப் படுவர். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை கைகளில் புரளும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

குருப்பெயர்ச்சி நடைபெறும் காலத்தில், 21.3.2022 இல் ராகு-கேது பெயர்ச்சி நிகழ இருக்கிறது. இதுவரை உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகுபகவான், உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இதன் பயனாக, சில நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வரலாம்.

ஊர் மாற்றம், இடமாற்றம் என்று எதுவாக இருந்தாலும், வரும் மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே இருக்கும். அதேநேரம் சப்தம ஸ்தானத்திற்கு கேது வருவதால், குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் பஞ்சமுக விளக்கேற்றி வைத்து வலம்புரி விநாயகரையும், குருபகவான் படம் வைத்து குருவையும் வழிபட்டு வாருங்கள்.

**செவ்வாய் - சனிபார்வை மற்றும் சேர்க்கை**

13.11.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய் - சனி பார்வையும், 26.2.2022 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய் - சனி சேர்க்கையும் ஏற்படுகிறது.

இந்த இரண்டு காலகட்டங்களிலும், மிகமிக கவனத்தோடு செயற்படுவது நல்லது. எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்க்க வேண்டும். நேர்மறைச் சொற்களையே அதிகம் உபயோகப்படுத்துங்கள். பிடிவாதக் குணத்தால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்.

குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லைகளும், மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது.

வழிபாடுகளையும், பரிகாரங்களையும் மேற்கொள்வதோடு, அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளையும், அருளாளர்களின் ஆசியையும் பெற்று செயற்படுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த குருப்பெயர்ச்சியால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். தொழில் வளர்ச்சியும், எதிர்பார்த்த இலாபமும் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைத்து, முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பார்கள். கணவன் - மனைவிக்குள் அன்பும் அரவணைப்பும் அதிகரிக்கும்.

பிள்ளைகளால் உதிரி வருமானம் உண்டு. திருமணம் போன்ற சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும். கற்பக விநாயகர் வழிபாடு கவலையைப் போக்கும்.

(தொடரும்)

# கொவிட் தடுப்பூசிகளின் செயற்றிறன் காலம் குறைவடைவதாக ஆய்வில் தகவல்

**(கொழும்பு)**

**கொவிட்-19 பரவல் தொடர்பான உலகின் போக்குகள் குறித்த ஆய்வுகளின்படி எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொவிட் தொற்று ஒப்பீட்டளவில் அதிகரிக்கும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

கொவிட்-19 தடுப்பூசி தொடர்பில் அமெரிக்கா நடத்திய புதிய ஆய்வு குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் அதிகளவில் பயன்படுத்தப்படும் மூன்று கொவிட் தடுப்பூசிகளினதும் செயற்றிறன் காலம், கணிசமான அளவில் குறைவடைவதாக புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

8 இலட்சம் அமெரிக்கர்களிடையே நடத்தப்பட்ட இந்த ஆய்வில் பைஸர், மொடெர்னா மற்றும் ஜோன்சன் அண்ட் ஜோன்சன் முதலான கொவிட் தடுப்பூசிகளின் செயற்றிறன் குறித்து ஆராயப்பட்டது.


இதன்போது, பைஸர் தடுப்பூசியின் செயற்றிறன் ஆரம்பத்தில் 89.2 சதவீதத்திலிருந்து 6 மாதங்களின் பின்னர் 58 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

மொடெர்னா தடுப்பூசியின் செயற்றிறன் குறித்த காலப் பகுதியில், 86.9 சதவீதத்திலிருந்து 43 சதவீதம் வரையில் குறைவடைந்துள்ளது.

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசியின் செயற்றிறன் 86.4 சதவீதத்திலிருந்து 13 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையிலும் பைஸர் மற்றும் மொடெர்னா தடுப்பூசிகள் பெருமளவில் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, இது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், மூன்றாம் தடுப்பூசியை வழங்குவதையும் முகக்கவசத்தை அணிவதையும் ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர்.



டிசெம்பர் மாதம் ஆகும்போது நிலைமை சிறந்ததாக அமையாது என்றே இந்த ஆய்வில் தெரிவிக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். (நி-5)

# வரவு - செலவுத்திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்கும் அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை

(கொழும்பு)

உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் பாரிய தொகை ஒதுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களை நேரில் சென்று சந்தித்த பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அடுத்த வருடத்தில் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

வரவிருக்கும் வரவு-செலவுத் திட்டம் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் அத்துடன் பொதுநலச் செயற்பாடுகளை அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# நுவரெலியாவில் அதிக பனிமூட்டம்

(ஹற்றன்)

மலையகத்தில் தொடர்ந்து மழையுடனான காலநிலை நிலவுவதால் நுவரெலியா மாவட்டம் அதிக பனிமூட்டம் நிறைந்து காணப்படுகிறது.



எனவே ஹற்றன் நுவரெலியா, வெலிமட, கண்டி வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் அவதானத்தோடு வாகன விளக்குகளை ஒளிரவிட்டு வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர். (நி-5)

# வரவு-செலவுத் திட்டத்தையடுத்து அமைச்சரவையில் மாற்றம் ஏற்படும்

(கொழும்பு)

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தை அடுத்து அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ள வாய்ப்புகள் உள்ளதென தகவல் வெளியாகியுள்ளது.

அரசாங்கத்திற்கு இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது மாற்றப்படாத அமைச்சுக்களின் செயற்பாடுகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதற்கமைய 30 அரச கூட்டுத்தாபனங்களின் ஆசனங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த பிரிவினரால் ஆரம்பகட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## பிளஸ் & மைனஸ்

நம்மோடு ஒட்டிக்கொண்டு விட்ட தவறான பழக்கங்களை நம்மால் விடமுடியாது என்று நாம் எண்ணுகிறோம். அதனாலேயே அப்பழக்கங்களை நம்மால் கைகழுவ முடியாமல் போகிறது. நம்மால் முடியும் என்று நாம் மனப்பூர்வமாக நம்பும் போது இது நிச்சயம் கைகூடுகிறது.

எண்ணமே வாழ்க!

எண்ணங்களே செயல்களாகின்றன.

குறையில்லா மனிதர்கள் எவருமிலர். மக்களால் மகாத்மா என்று போற்றப்பட்ட காந்திஜி போன்றவர்களும் கூடத் தவறான பழக்கங்களை உடையவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் மனமாற்றம் அடைவதற்கு ஏதோ சில சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அதனால் அவர்கள் தங்களைத் திருத்திக் கொண்டார்கள். மேலும் நம்மை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படை உணர்வுகள் அவர்களது மனதை அரித்தெடுத்திருக்க வேண்டும். நம்மிடமுள்ள குறைகள் நீங்கினால் நாம் விரைவில் முன்னுக்கு வந்துவிட முடியும்.

மனவுறுதி இல்லாதவர்கள் தாம் தீய பழக்கங்களுக்கு அடிமையாகிறார்கள். தீய பழக்கங்களில் உள்ள கெடுதல்களையும் நற்பழக்கங்களினால் அடையக்கூடிய நன்மைகளையும் உணரத் தொடங்கினால் நிச்சயம் மன உறுதி ஏற்படும்.

திருத்த வேண்டும், தீய பழக்கங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று எல்லோரும் விரும்பத்தான் செய்கிறார்கள். ஆனால் தீவிரமான எண்ணம் இல்லாததனாலும் அதை எப்படி நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பதில் உள்ள சிக்கல்கள் மலைப்பை ஏற்படுத்துவதாலும் எந்தவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளாமல் மீதமிருக்கும் காலத்தையும் இப்படியே கழித்து விடுவோம் என்று சமாதானம் செய்து கொள்கிறார்கள்.

நம்மிடம் உள்ள குறைபாடுகள் என்னென்ன என்பதை நாம் உணர்ந்து அவற்றை நாம் முதலில் பட்டியலிட வேண்டும். நம்மையும் அறியாமல் நம்மிடம் குடிகொண்டுள்ள குறைகளைப் பட்டியலிட வேண்டும். நம்மிடம் நெருங்கிப் பழகுபவர்களிடம் என்னிடம் நீங்கள் காணும் குறை என்ன? என்று நேரடியாகவே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பெருங்கடனாளியாக உள்ளவன் பணக்காரனாக விரும்பினால் அவனது முதல் செயல் என்னவாக இருக்கும்? கடனை அடைப்பதற்கான முயற்சிகளை முதலில் மேற்கொள்ள வேண்டும். பிறகு தான் தன் நிலையை அவன் உயர்த்திக்கொள்ள முடியும்.

அதைப்போலவே புதுவாழ்வு வாழ விரும்புபவர்கள் முதலில் தங்களது குறைகளை உணர்ந்து அவற்றைப் போக்கிக்கொள்ள வேண்டும். இந்த உணர்வை அடிமனதிலேயே ஏற்படுத்திக்கொண்டு விட வேண்டும். பிறகு மெல்ல நற்பழக்க வழக்கங்களை மேற்கொள்ள ஆரம்பிக்க வேண்டும்.

படைபடையாக உடம்பில் அழுக்கை வைத்துக் கொண்டு மேலும் அதைப் பவுடர் பூசி மறைப்பதில் பயனென்ன இருக்க முடியும்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## பதவி மோகம்



“என்ன நரியாரே! குறட்டை விடாதவர், நான் ஒருவன் தான் என்று கூறி விட்டாயே... இருட்ட ஆரம்பித்தால் போதும், விடியும் வரை தூங்கி பழக்கப்பட்டவன் நான் என்பது உனக்கு தெரியாதா? நீதிபதிகள் இரவு ஆய்வுக்கு வரும் போது, நான் குறட்டை விட்டு தூங்கிட்டு இருந்தா, நம்ம திட்டம் என்னவாகும்...” என்று கேட்டது புலி.

“ராஜாவா ஆகணும்னா சும்மாவா... கொஞ்சம் கஷ்டப்பட்டு தான் ஆகணும். குறட்டை ஆய்வுக்கு நீதிபதிகள் வரும் போது நல்லா தூங்கிற மாதிரி நடிக்கணும் ஆனா தூங்கக்கூடாது,” என்றது நரி.

“தூங்காமலிருக்க என்ன வழி?” “நான் சொல்வதை கவனமாக கேளுங்கள். என் மனைவி ரொம்பவும் ருசிமிக்க சூப் தயாரிப்பதில் வல் லவள். 10 கப் சூப் கொடுத்தனுப்புகிறேன். இரவு, 10 மணிக்கு அப்புறம், அரை மணிக்கு ஒரு முறை, ஒரு கப் சூப் சாப்பிட்டா, தூக்கம்கிட்டவே வராது,” என்றது நரி.

புலியும், நரியும் உரையாடி கொண்டிருந்ததை, கரடியின் நெருங்கிய நண்பன், காகம் கேட்டு விட்டது. உடனே, இவ்விடயத்தை, கரடியிடம் சொல்வதற்காக வேகமாக பறந்து சென்றது.

அன்று இரவு, நரி கொடுத்த சூப்பை, ருசி பார்த்து விட்டு, “ஆஹா... அற்புதம்! அவசரப்படக்கூடாது. 10 மணிக்கு மேல தான் அரை மணிக்கு ஒரு முறை குடிக்கணும். அது வரை, கொஞ்சம் தூங்கிட்டு, பின், சூப்பை குடிக்கலாம்” என்று எண்ணி, கால்களை நீட்டிப்படுத்தது புலி.

அந்த நேரம், கரடியின் ஆலோசனைப்படி, சூப்பில், தூக்க மாத்திரைகளை கலந்து விட்டது காகம். இரவு முழுவதும் காடுகளில் ஆங்காங்கே சென்று, மிருகங்களின் குறட்டையை ஆய்வு செய்து முடித்த நீதிபதிகள், தங்களின் ஆய்வு முடிவை, பொழுது விடிந்ததும் அறிவித்தன.

“காட்டில் குறட்டை விடாதவங்க யாரும் இல்லை என்பதை நாங்கள் நடத்திய ஆய்வில் தெரிந்து கொண்டோம். இன்றைய ராஜாவாக இருந்து வரும் சிங்கம், தொடர்ந்து ராஜாவாக நீடிப்பதில் தவறில்லை.

“குறட்டை விடுவதில், ராஜாவுக்கு இணையாக இருக்கும் புலியை, குறட்டை விடாதவர்னு பொய் சொல்லி, சிபாரிசு செய்த நரிக்கு, ஆறு மாதம் இந்த காட்டை இரவு காவல் காக்கணும்னு, நாங்க உத்தரவிடுகிறோம்” என்று நீதிபதிகள் தீர்ப்பளித்தன.

அப்போது, புலியும், நரியும் போட்ட சதித்திட்டம் குறித்து தான் அறிந்ததையும், புலி குடிக்க வைத்திருந்த சூப்பில், தூக்க மாத்திரை கலக்க செய்ததையும் நீதிபதிகளிடம் கரடி எடுத்துக்கூறியதோடு, அவர்களிடம் மன்னிப்பும் கேட்டுக்கொண்டது. சதித்திட்டத்தை புரிந்து கொண்ட நீதிபதிகள், புலி மந்திரியாக நீடிக்க தகுதி இழந்து விட்டது என்பதையும் சுட்டிக் காட்டின.

புலிக்கு பதிலாக, மந்திரி பதவிக்கு, கரடியை நீதிபதிகள் சிபாரிசு செய்தன. பதவி ஆசைக்காக, நான் எதையும் செய்யவில்லை என்று கூறி, தன்னைத்தேடி வந்த பதவியை ஏற்க மறுத்தது. அதற்காக, குரங்கை சிபாரிசு செய்தது கரடி.

கரடியின் பெருந்தன்மையை பாராட்டி, மிருகங்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன், குரங்கு மந்திரியாவதற்கு தங்களது ஆதரவை தெரிவித்தன. குரங்குக்கு, பதவியேற்பு விழாவை நடத்தி வைத்த நீதிபதிகள், சிங்கராஜாவை பார்த்து, “தூக்கம் தேவை தான் அதே சமயம் குறட்டையை கொஞ்சம் குறைத்து கொள்வது உங்களுக்கும் மற்றும் அனைவருக்கும் நல்லது” என்று கூறின. நீதிபதிகளின் கருத்தை ஏற்றுக் கொண்டது சிங்கராஜா. குட்டீஸ், பதவிக்கு ஆசைப்படுவது தவறல்ல. ஆனால், முதலில் அதற்கு உரிய தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும் சரியா. (முற்றும்)

# மகாபாரதம்




இது குறித்து ரிஷிகளின் முடிவைக் கேள். “புலால் உண்ணாமலும், பிற உயிர்களைக் கொல்லாமலும், கொல்லத் தூண்டாமலும் இருக்கும் ஒருவன் பிராணிகளின் அன்பன்” என்று பதினான்கு மனுக்களுள் ஒருவரான ஸ்வயம்பு மனு சொல்லியிருக்கிறார். புலால் உண்ணாதவனை சாதுக்களும் போற்றுகின்றனர்.

“எவன் தன் தசையைக் கொண்டு பிறரை வாழ வைக்க நினைக்கின்றானோ, அவன் நம்பத்தக்கவன்” என்று நாரதர் கூறியிருக்கிறார்.

“ஊனையும் கள்ளையும் விடுபவன் தானம், தவம், யாகங்கள் செய்வதால் பெரும் பயனைப் பெறுகிறான்” என்று பிரகஸ்பதி சொல்லியிருக்கிறார்.

இடைவிடாமல் நூறு ஆண்டுகள் அஸ்வமேத யாகம் செய்வதும் புலால் உண்ணாமல் இருப்பதும் சமம் என்பது என் கருத்து.

புலால் உண்ணும் பழக்கத்தை எவன் ஒருவன் விட்டு விடுகிறானோ அவன் வேதங்களாலும் யாகங்களாலும் பெற முடியாத நன்மையை அடைவான். ஏதோ ஒரு காரணத்தால் புலால் உண்ண நேர்ந்தாலும் பிராயச்சித்தமாகக் கடும் தவம் புரிய வேண்டும்.

சுவை கண்டவன் புலாலை விடுவது கடினமானது என்பது உண்மையாயினும், எல்லா உயிர்களுக்கும் அபயம் கொடுப்பதாகிய இந்த் புலால் உண்ணாமை என்னும் விரதத்திற்கு இணை ஏதுமில்லை.

எவன் எல்லா உயிர்களுக்கும் அபயம் அளிக்கின்றானோ அவன் உலகுக்கே உயிர் அளிக்கிறான் என்பதில் ஐயமில்லை. மேலோர்கள் இதனையே முதன்மையான அறம், என்று போற்றுகின்றனர்.

அறிவும், தூய மனமும் உள்ளவன் தன்னைப் போலவே எல்லா உயிர்களையும் நேசிப்பான். எறியப்பட்ட தடியால் புல் அசையும் போதும் அதற்கும் பயம் இருக்கிறது என்றால், விரைவாகக் கொல்லப்படும் உயிர்கள் படும் துன்பத்தைச் சொல்லவா வேண்டும்? ஒரு தீமையும் செய்யாத ஒரு விலங்குக்கு நோய் இல்லாமலேயே புலால் உண்ணும் புல்லர்களால் மரண பயம் இருக்கிறது என்பதை எண்ணுகையில் துக்கம் உண்டாகிறது.

எனவே புலால் உண்பதைத் தவிர்த்தல் தருமத்திற்குக் காரணமாகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். கொல்லாமை தான் மிக உயர்ந்த தருமம். கொல்லாமையே மிக உயர்ந்த தவம். கொல்லாமையே மிக உயர்ந்த வாய்மை!

புல்லிலிருந்தோ, கல்லிலிருந்தோ, கட்டையிலிருந்தோ புலால் கிடைப்பதில்லை. ஒரு உயிரைக் கொன்றால் தான் கிடைக்கும் ஆகவே அதை உண்பது பாவம் ஆகும். புலால் உண்ணாதவனுக்கு அச்சம் இல்லை. அவன் ஏற முடியாத மலை மீது அஞ்சாமல் ஏறுவான். (தொடரும்)

கடுமையான சொற்கள், கசப்பான சொற்கள்
பலவீனமான கொள்கையின் அறிகுறி!
– விக்டர் ஹியூகோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நான் நினைத்திருந்தால் இராணுவ ஆட்சியை...

நான் நினைத்திருந்தால் இராணுவ ஆட்சியை முன்னெடுத்திருப்பேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருப்பதானது இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை ஒரு சிறிய நாடு.

1948 இல் சுதந்திரமடைந்த பின்னர் ஜனநாயகத்தின் பேரால் அரசாட்சி நடக்கின்ற நாடாக இலங்கை விளங்குகிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் றோஹண விஜயவீர ஏற்படுத்திய புரட்சி முறியடிக்கப்பட்டது என்ற பதிவைத் தவிர, இலங்கையில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்துகின்ற எண்ணம் எவரிடமும் இருந்ததில்லை.

காலத்திற்குக் காலம் நடைபெறுகின்ற தேர்தல் மூலம் அரசாங்கம் தெரிவு செய்யப்படுவதே வழமை என்றளவில், சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் இராணுவப் புரட்சிக்கான சிந்தனைகள் அறவே எழவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், நான் நினைத்திருந்தால் இராணுவ ஆட்சியை முன்னெடுத்திருப்பேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருப்பதானது அதிர்ச்சி தரக் கூடிய விடயம் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

அதிலும் தற்போது நாட்டின் ஜனாதிபதியாக இருந்து கொண்டு மேற்கண்டவாறு கோட்டாபய ராஜபக்ஷ கூறியமை இலங்கையின் எதிர்காலம் குறித்து பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தவே செய்யும்.

தவிர, ஜனாதிபதியின் மேற்போந்த கூற்று எதற்கானதென்பது பற்றி அரசியல் ஆய்வாளர்கள் விலாவாரியாக விமர்சிக்கவே செய்வர்.

அவ்வாறானதொரு விமர்சனம் எழும் போது, அரசாட்சியைச் செய்ய முடியாத ஒரு சூழ்நிலையை ஆளும் தரப்பு சந்தித்து வருகிறது என்பதும் நாட்டில் நடைபெறுகின்ற போராட்டங்கள் அரசாங்கத்திற்குப் பெரும் தலையிடியாய் அமைந்துள்ளதென்பதும் அந்த விமர்சனத்தில் நிச்சயம் இடம்பெறும்.

எது எவ்வாறாயினும் நான் நினைத்திருந்தால் இராணுவ ஆட்சியை முன்னெடுத்திருப்பேன் என ஜனாதிபதி கூறியதன் உள்நோக்கம்; போராட்டக்காரர்களையும் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிப்பவர்களையும் எச்சரிக்கை செய்வதை அடிப்படையாகக் கொண்டது என நாம் அனுமானிக்க முடியும்.

அதாவது பொருட்களின் அதீத விலையேற்றம், உர வகைகளின் தடை என மக்கள் மிகப் பெரும் பொருளாதார மந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்நேரத்தில்,

மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராடுவார்களாக இருந்தால், இராணுவ ஆட்சி பற்றிச் சிந்திக்க வேண்டி வரும். அவ்வாறு சிந்திக்கக் கூடியவன் நான் என்ற செய்தியே ஜனாதிபதியின் கூற்றுக்குள் அடங்கியுள்ளதென்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

## கோவிட்டின் புதிய திரிபுகள் இலங்கையில் பரவும்

### அரச மருத்துவர் சங்கம்

இலங்கையின் கேந்திர அமைவிடத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், வெளிநாடுகளில் அடையாளம் காணப்படும் கோவிட் - 19 வைரஸின் புதிய திரிபுகள் எமது நாட்டிற்குள் இலகுவாகப் பிரவேசிப்பதற்கான அச்சுறுத்தல் நிலை உயர்வாகக் காணப்படுகின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினரான வைத்திய நிபுணர் வாசன் ரட்ணசிங்கம் வலியுறுத்தியுள்ளார். (ஞா)

## புதிய முறையில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டம்

(கொழும்பு)

கோவிட் தொற்று காரணமாக பாடசாலை மாணவர்கள் இழந்த கல்வியை மீண்டும் வழங்க புதிய வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மாணவர்கள் இழந்த கல்வியை வழங்குவதற்கு நவம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரையில் காலம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அது ஏப்ரல் மாதம் வரையில் நீடிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

3 ஆம் மற்றும் 4 ஆம் தர மாணவர்கள் 5 ஆம் தரத்திற்கு சென்று 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதல் டிசம்பர் வரையில் இந்த கல்வி நடவடிக்கையை வழங்க முன்மொழியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

## கல்வி, வெளிவிவகார அமைச்சர்கள் பதவி விலகத் தீர்மானம்?

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகள் தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கவுள்ளதாக அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுக்கு அறிவித்துள்ளனர்.

தமது அமைச்சுச்செயலாளர்களுடன் இணைந்து செயற்பட முடியாத நிலையிலேயே இவ்வாறு அமைச்சுப் பதவிகள் தொடர்பில் தீர்மானம் எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவதாக அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் ஏற்கனவே ஜனாதிபதி செயலகம், பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோருக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தங்களது அமைச்சுக்களின் செயலாளர்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படாவிடின் உறுதியான தீர்மானத்தை எடுக்க நேரிடும் என அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஞா)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**“ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்.”**

**-கரோலஸ் அலினேயஸ்**
**(தாவர வகைப்பாட்டியலாளர்)**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 9 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** அறிவியல் நகர், அறிவியல் நகர் தென்னை ஆராய்ச்சி மையம் தர்மக்கேணி, இந்துபுரம், இரணைமடு சந்தி, முறிகண்டி கோவில், முறிகண்டி கிராமம், தம்பகாமம் தர்மக்கேணி, தர்மக்கேணி, சந்தநகர், விவசாயபீடம், விவசாய பீடம் பண்ணை, விவசாய ஆராய்ச்சி நிலையம், மத்திய வங்கி, பொறியியல் பீடம், கார்கில்ஸ் பூட் சிற்றி அறிவியல் நகர், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, தகவல் தொழில்நுட்ப பீடம், கொக்காவில் இராணுவ முகாம், முறிகண்டி சர்வீஸ் கார்ப்ஸ் (7 ஆவது றெஜினென்ட்) வானவில் அறிவியல் நகர், விடியல் அறிவியல் நகர் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** அறுகம்புல் வெளி, கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், குகன் நகர், குழுமாட்டுச் சந்தி, மறக்காறம் பளை- கணேசபுரம், நாகரிலுப்பைக்குளம், நாகரிலுப்பைக்குளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பட்டைகாடு, வேப்பங்குளம் 6 ஆவது வீதி, பட்டாணிச்சூர், புளியங்குளம், பம்பைமடு, பம்பைமடு சந்தி, பெரிய காடு, புதிய கோவில் குளம், சாம்பல்தோட்டம், அஸ்வி அரிசி ஆலை,- காத்தான் கோட்டத். தெய்வேந்திரம் அரிசி ஆலை, தொழில்நுட்பக் கல்லூரி, வேப்பங்குளம், சியாம் அரிசி ஆலை (சிவா அரிசி ஆலை) குருக்களூர், மன்னார் வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### இறைவனுக்குத் தேவை



உனக்குள்ளாக இருக்கக் கூடிய அறிவினைத் தெரிந்து கொள்ள முடியவில்லை, என்றால் அதற்கும் அப்பால் ஆதியாக இருக்கக்கூடிய ஐம்புலன்களால் உணர முடியாத இறைவனை எப்படி அறிய முடியும்? அதனால் முதல் கட்டமாக அறிவை அறிந்து கொள்வோம். ஒவ்வொரு நாளும் அனுபவத்தால். வாழ்க்கையிலே நம்முடைய அறிவு அந்த எல்லையை நோக்கி தான் வளர்ச்சி பெற்றுக் கொண்டு இருக்கிறது. மனிதனுடைய அறிவு இறைநிலையின் ஒரு பகுதி தான்.

அந்த இறைநிலையையும் அதன் ஒரு பகுதியாகிய இயற்கையையும் முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அறிவு விரிந்து கொண்டே இருக்கிறது. எனவே இறைவனை புரிந்து கொள்வது என்றால் முதலில் அறிவைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு அறிவுக்கு மூலமான ஒரு நிலையை நாடிச் செல்ல வேண்டும். அந்த நிலை தான் இறைநிலை. எனவே அறிவை அறியாது இறைவனை அறிய முடியாது. ஏனெனில் இறைவனே தான் அறிவாக இருக்கிறான்.

இறைவன் என்னும் தத்துவம் எங்கும் நிறைந்துள்ள ஓர் பேராற்றல், அதனுடைய தன்மைகளில் இன்னொன்று அன்பு. அந்த அன்பு உங்கள் எண்ணம், சொல், செயல்களில் ஊடுருவி நிறைந்திருந்தால் அதுதான் நீங்கள் இறைவனுக்குச் செய்யக் கூடிய கடமை. எல்லோரிடத்திலும் அன்பைக் காட்டுங்கள், இறைவன் மகிழ்ச்சி அடைவான். ஏனெனில் அவன் அன்பும் கருணையுமாக அனைத்து உயிர்களிலும் நிறைந்துள்ளான். அவனை மகிழ்விக்க இதைவிடச் சிறந்த வழி வேறொன்றில்லை. உடலும், குடலும் அற்ற இறைவனுக்கு வேறு ஒரு தேவையுமில்லை. பொருட்களைக் கொடுத்து இறைவனை மகிழ்விக்க நினைப்பது அறியாமையே.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

## 11

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்




**"வாள் அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற நாள் ஒற்றித் தேய்ந்த விரல்"**
**-திருகுறள்**

**கோடிட்டு எண்ணும் முறைமை தமிழர் மத்தியிலும் இருந்துள்ளது.**

**வாசகர்கள் கவனத்திற்கு - இப் பகுதியில் பல நாடுகளின் பண்டைய எண் முறைமைகள் பற்றி எழுதப்படுகிறது. இங்கு பல அட்டவணைகள், உருக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை எல்லாவற்றையும் பார்க்கும் போது தற்காலத்து பொது உளச்சார்பு வினாக்கள் போலத் தென்படும். புலமை பரீட்சை வினாத்தாள்களில் கூட இப்படியான கேள்விகள் வந்துள்ளன. அம்மாணவர்கள் கூட பொழுதுபோக்காக இக் குறியீடுகளை வரையவோ அல்லது பெறுமானம் காண முயற்சிக்கலாம்**

**நீங்களும் முயற்சிக்கலாம் 2**



கோடிட்டு எண்ணலில் இது எவ்வளவு? விடை 5+5+4 =14


### பண்டைய சீனாவின் எண் முறைமை (கி.மு. 1500 ஆண்டுகள்)

பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் அடிப்படையில் ஷாங்க் வம்சம் ஆரம்பகால சீனாவை ஆண்ட வம்சமாகும். இருப்பினும் பிற வம்சங்கள் இதற்கு முன்னரே இருந்தன என்று கூறப்படுகிறது. ஷாங்க் கி.மு. 1600 முதல் 1046 வரை சீனாவை ஆட்சி செய்தார். இக்காலம் வெண்கலயுகம் என அறியப்பட்டது. அக்காலத்தில் சீனர்கள் கணிதம், வானியல், கலைப்படைப்பு மற்றும் இராணுவ தொழில்நுட்பம் ஆகியவற்றில் முன்னேற்றம் அடைந்தவர்களாக அறியப்பட்டனர். அக்காலத்தில் அவர்களால் பயன்படுத்தப்பட்ட எண்முறைமை அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.


அட்டவணை 1 இனைப்பார்த்தால் அடிப்படைக் குறியீடுகள் 1,5,6,7,8,9,10,100 மற்றும் 1000 இற்கு கொடுக்கப்பட்டுள்ளதையும் மற்றையவை இக் குறியீடுகளிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளதையும் காண முடியும். அதாவது இவ் எண்களை தவிர வேறு எண்களை உண்டாகக் குறியீடுகள் அதற்கு ஏற்றவாறு ஒருங்கிணைக்கப்படுகின்றன. பெருக்கல் பண்புகளைக் கொண்டிருப்பதன் மூலம் 200 என்பது 2 இற்கான குறியீட்டையும் 100 இற்கான குறியீட்டையும் குறிக்கின்றன, 300 என்பது 3 இற்கான குறியீட்டையும் 100 இற்கான குறியீட்டையும், 400 என்பது 4 இற்கான குறியீட்டையும் 100 இற்கான குறியீட்டையும் குறிக்கின்றன. இதேபோல் 2000 ஐ 2 இற்கான குறியீடும், 1000 இற்கான குறியீடும் குறிக்கின்றன.

3000 ஐ 3 இற்கான குறியீடும், 1000 இற்கான குறியீடும் குறிக்கின்றது. இவ்வாறே பிறவும். 10000 இற்கான குறியீடு இவ் விளக்கத்தில், சேர்க்கவில்லை, ஆனால் அது ஒரு தேள் வடிவத்தை குறிக்கிறது. இருப்பினும் பெரிய எண்கள் கண்டு பிடிக்கப்படவில்லை, ஷாங்க் எலும்புகள் மற்றும் ஆமை ஓடுகளில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப் பெரிய எண்ணிக்கை 30000 ஆகும். நீங்களும் அம்முறையில் எண்களை எழுத முயற்சிக்கலாம்.

அட்டவணை 1 பண்டைய சீனாவின் எண்முறைமை




**பண்டைய சீனாவின் எண் முறைமை உதாரணங்கள்**




### சிந்து சமவெளி நாகரிகத்தில் எண் குறியீட்டின் தோற்றம்

ஆர்யபட்டா அறிவு பல்கலைக் கழகத்தின் (Aryabhatta Knowledge University) கணிதத் துறையால் "சிந்து சமவெளி நாகரிகத்தில் எண் குறியீட்டின் தோற்றம்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று "International Journal for Research in Engineering & Management" என்னும் சஞ்சிகையில் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெளிவந்திருந்தது. அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

கி.பி. 1920 இந்தியாவில் இரண்டு பழைய பெரிய நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. அவை மொஹென் -ஜோ-தாரோ மற்றும் ஹரப்பா. மொஹென்-ஜோ-டாரோ மற்றும் ஹரப்பாவில் அகழ்வாராய்ச்சியில் பல ஆவணங்கள் கிடைத்தன. அவை கி.மு. 3500 திகதியிடப்பட்ட முத்திரைகள், கல்வெட்டுகள் போன்றவை. இந்நாகரிகம் சிந்து பள்ளத்தாக்கு நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது. அட்டவணை 1 மற்றும் 2 இல் காணப்படும் குறியீடுகள் சிந்து சமவெளியில் எண்களைக் குறிக்கும் குறியீடுகளாக இருந்துள்ளன. நேரோஜ்னக் (ரஷ்யன்), இன் கூற்றுப்படி, அனைத்து செங்குத்து கோடுகளும் 1-9 முதல் சின்னங்களைக் குறிக்கும்.

**அட்டவணை 1 சிந்து சமவெளி நாகரிகத்தில் எண் குறியீடுகள்**



எண் முறைமைகளில் மாயர் எண் முறைமை, சுமேரியர் - பபிலோனியர் எண் முறைமை, எகிப்தியர்களின் எண்முறைமை, கிரேக்க எண்முறைமை எனப் பல நாடுகளிலும் வெவ்வேறான எண் முறைமைகள் இருந்தன.

**எண் முறைமைகளில், மாயர் எண் முறைமை; சுமேரியர் - பபிலோனியர் எண் முறைமை, எகிப்தியர்களின் எண்முறைமை, கிரேக்க எண் முறைமை எனப் பல நாடுகளிலும் வெவ்வேறான எண் முறைமைகள் இருந்தன.**

ஒரு எண் அமைப்பு (அல்லது எண் முறைமை) என்பது எண்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு எழுத்து முறை ஆகும்.


அதாவது எண் அமைப்பு என்பது கொடுக்கப்பட்ட தொகுப்பின் எண்களைக் குறிப்பதற்கு ஒரு கணிதக் குறியீடு, இலக்கங்கள் அல்லது பிற குறியீடுகளை ஒரு நிலையான முறையில் பயன்படுத்துதல் ஆகும்.

எண் குறிக்கும் அவ்வெண் அதன் பெறுமானம் (மதிப்பு) என்று அழைக்கப்படுகிறது.

நவீன நாட்களில் கருதப்படும் அனைத்து எண்களையும் அனைத்து எண் அமைப்புகளாலும் குறிக்க முடியாது; எடுத்துக்காட்டாக, ரோமானிய எண்களுக்கு பூச்சியம் இல்லை.

மேற்கு அரபு (Western Arabic), கிழக்கு அரபு (Eastern Arabic), பெங்காலி (Bengali), தேவநாகரி (Devanagari), குஜராத்தி (Gujarati), குர்முகி (Gurmukhi), ஒடியா (Odia), தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ட்சோங்கா (Dzongkha), திபெத்திய, பலினீஸ் (Balinese), பர்மீஸ் (Burmese), ஜாவானீஸ் (Javanese), கெமர் (Khmer), லாவோ (Lao), மங்கோலியன் (Mongolian), தாய் (Thai) ஆகிய நாடுகளிலிருந்த, இருக்கின்ற எண் முறைமைகள் இந்து-அரபு எண் முறைமையின் கீழ் அடங்குகின்றன.

**அட்டவணை-2 சிந்து சமவெளி எண்கள்**



இவற்றின் பெறுமானங்கள் முறையே 76, 6,11, 35,19 எனக் காணப்பட்டுள்ளது

(தொடரும்...)

## சுவர் இடிந்து ...

நேற்றைய தினம் குறித்த தொழிற்சாலையின் இயந்திரப் பகுதியில் பணிபுரிந்து கொண்டிருந்த ஊழியர் ஒருவர் மீது சுவர் ஒன்று இடிந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சம்பவ இடத்திலேயே அவர் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

சம்பவத்தில் மாத்தளை பகுதியைச் சேர்ந்த வேலு உதயராஜ் ( வயது-37) என்ற-நபரே மரணமடைந்துள்ளார்.

(ஞா-250,299)


மெகா பவர்
திகதி 07/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0927
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
S 05 20 25 57 70

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/11/07
1630 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 03 வெற்றி இலக்கங்கள் 02 17 27 49

மஹஜன சம்பத
திகதி 2021/11/07
சீட்டிழுப்பு இலக்கம் 4579
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
0 0 8 5 3 0 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 07.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2874
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
E 31 34 38 70
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2021.11.07
சீட்டிழுப்பு இலக்கம் - 609
W 04 07 13 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்


## விரைவில் ...

தரமான கல்வியை வழங்குவதில் அரசு அர்ப்பணிப்புடன் இருப்பதாக அவர் உறுதியளித்தார்.

இந்த நேரத்தில் மாணவர்களுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் தார்மீக மற்றும் அர்ப்பணிப்புடன் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கல்வி அமைச்சர் குணவர்த்தன கேட்டுள்ளார். (ஞா)

## கல்வி நடவடிக் ...

அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, 10, 11, 12 மற்றும் 13ஆம் தரங்களின் கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. சுகாதார பரிந்துரைகளுக்கு அமைவாக மாணவர்கள் பாடசாலைக்கு அனுப்பப்படுவதை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என கல்வி அமைச்சு வலியுறுத்துகிறது. (ஞா)

## 626 பேருக்கு...

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 545,256 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## 15 பேர் ...

மொத்த கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 13,856 ஆக உயர்வடைந்துள்ளது.

இதில் 8 ஆண்களும் 7 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 12 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். (ஞா)

## மூன்று பேர் ...

நேற்று முன்தினம் இரவு மூவரை புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நீர்கொழும்பு, அனுராதபுரம், பொலனறுவை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

(ஞா-281)

## ஆட்சி ...

ணம்" என்று ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான அநுரபிரியதர்ஷன யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்டவர்கள் விமர்சித்துள்ளனர்.

எனவே, தவறுகளை அவசரமாகத் திருத்திக்கொண்டு மக்கள் மயப்பட்ட ஆட்சியை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மாற்று அரசியல் சக்தி ஆட்சிப்பீடம் ஏறுவதைத் தவிர்க்க இயலாது என ஸ்ரீலங்கா பொதுஜனமுன்னணி தலைமையிலான அரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.(ஞா)



31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்
எமது பாடசாலை ஆசிரியர்
திரு. சி. பரஞ்சோதி அவர்களின்
மாமியார்
அமரர் இராசேஸ்வரி செல்லத்துரை
அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
ஆவரங்கால், புத்தூர்.
(8544)



அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1382
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 07.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 4,383,620
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
04 09 34 56 J
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுப்படியாகும்.

சனிதா Shanida
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3717
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 07.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 2,598,940
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
34 38 39 75 M
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட்
ரூ. 4,828,496/-
Draw Date திகதி 2021 / 11 / 07
Draw Number வெற்றி வாரம் 3268
Colour வர்ணம் ஞாயிறு
வெற்றி இலக்கங்கள் மகரம்
05 06 49 53
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,177,840/-

SUPER BALL
Draw Number சீட்டிழுப்பு வாரம் 1556
Colour நிறம் சிவப்பு
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2021 / 11 / 07
Week Days Name தினம் ஞாயிறு
X 07 47 71 76
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ 2,044,240/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதய
சீட்டிழுப்பு வாரம் 762
வர்ணம் மஞ்சள்
திகதி 07.11 2021 ஞாயிற்றுக்கிழமை
C 01 16 24 29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.
85,907,045/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


## சீரற்ற காலநிலை ...

காலநிலை காரணமாக குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

துணுக்காய், எல்ல, பசறை மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களில் மரணங்கள் பதிவாகியுள்ளன. மின்னல் தாக்கத்தினால் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை, கண்டி, குருநாகல் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஞா)

## மீண்...

கடந்த சில வாரங்களாக நாளாந்தம் 500 தொடக்கம் 600 வரையான கொரோனாத் தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டு வந்த நிலையில், கடந்த மூன்று நாட்களாக அந்த எண்ணிக்கை 600 ஐக் கடந்துள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், தொற்றாளர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்படுமாக இருந்தால் மீண்டும் பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஞா)

## ஒரு ...

ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

அந்த விலையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (ஞா)


10 லட்சம் யாழ் மாவட்ட வரலாற்றில் 20 லட்சம்
ஒரே நாள் - ஒரே முகவர்
2 அதிர்ஷ்டங்கள் லட்சாதிபதிகள் 2
06-11-2021 -சனிக்கிழமை


சனிதா
4 இலக்கங்கள் பொருந்தியது
அபிவிருத்தி லொத்தர் சபை
09-9060
NLB
N220063
நடராஜா வசீகர்
பிரதான முகவர், சுன்னாகம்.


மஹஜன
6 இலக்கங்கள் பொருந்தியது
(C-2978)
ஒன்றாவது வாங்குவோம் என்றாவது வெல்வோம்

## இலங்கை ...

கள வாரஇதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் விடுதலைப் புலிகள் இந்த குற்றத்தை முன்வைத்துள்ளனர் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

51 பக்கங்களை கொண்ட அந்த முறைப்பாட்டில் பொலிஸ் அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இராணுவ அதிகாரிகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், புலனாய்வுப் பிரிவினர், விசேட அதிரடிப்படையின் முன்னாள் தலைமை அதிகாரிகளுக்கு எதிராக போர்க் குற்றம் முன்வைக்கப்பட்டுள்ளது.

உலகில் எந்த நாட்டைச் சேர்ந்த பொலிஸ் துறையினர் மீதும் இப்படியான குற்றச்சாட்டு முன்வைக்கப்படவில்லை என அந்த வாரஇதழ் குறிப்பிட்டுள்ளது.

கமால் குணரத்ன, ஜகத் ஜயசூரிய, ஏ.சீ. ஆனந்தராஜா, சந்திரா பெர்னாண்டோ, விக்டர் பெரேரா, இந்திரா சில்வா, ஜயந்த விக்ரமரத்ன, நளின் இலங்ககோன், பூஜித் ஜயசுந்தர, சீ.டி.விக்ரமரத்ன, நிமல் லெவ்கே, நிமல் வாகிஸ்ட, கே.எச். சரத்சந்திர, எம்.சீ. ரணவக்க, கே.ஏ.ஆர். பெரேரா, சிசிர மெண்டிஸ், எம்.ஆர். லத்தீப் ஆகியோரது பெயர்கள் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

முறைப்பாடு தொடர்பில் சாட்சியமளிக்க 200 பேர் முன்வந்துள்ளனர். குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களை கைது செய்யுமாறும் முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது. (ஞா)

## முன்னறிவித்தலின்றி பணிப் புறக்கணிப்பு

### மின்சார சபை தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

எதிர்காலத்தில் திடீர் பணிப்புறக் கணிப்பை முன்னெடுக்க தயாராகவுள்ளதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

யுகதனவி மின் நிலையத்தின், அரசுக்கு உரித்தான பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்கும் உடன்படிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாக மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எவருக்கும் தெரியாத இந்த உடன்படிக்கையை அரசாங்கத்தினால் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படாவிட்டால், பணிப்புறக் கணிப்பை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என ஒன்றியத்தின் இணைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார். (ஞா)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சிவயோகன்

(ஓய்வுநிலை நிறைவேற்று பொறியியலாளர் – வீதி அபிவிருத்தி திணைக்களம், வடக்கு – கிழக்கு மாகாணம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)



தோற்றம் : 02.02.1951
மறைவு : 07.11.2021

அல்வாய் வடக்கு தெகனையைப் பிறப்பிடமாகவும் துன்னாலை மத்தி ஆயர்பாடியை வாழ்விடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவயோகன் நேற்று (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கோவிந்தசாமி - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் பாரதியின் அன்புக் கணவரும் பாமினி (ஆசிரியர் - யா/ குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை), சாமினி (தொழில்நுட்ப உத்தியோகத்தர்- வீதி அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி), ஜனனி (ஆய்வு உத்தியோகத்தர்- உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்), சாளினி (ஆசிரியர் - யா/ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் தேசிய பாடசாலை), ஜனகன் (யாழ். புகையிரத நிலைய அதிபர் - இலங்கை புகையிரதத் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீபன் (உரிமையாளர் - V.T.P. தொழிலகம், நெல்லியடி), பிரபேஸ்கண்ணன் (ஆசிரியர் - யா/ நெல்லியடி மத்திய கல்லூரி), அரவிந்தன் (பொறியியலாளர் - கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்), பிரஷ்ணன் (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), சிவஸ்ரிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற கருணாநிதி (கணக்காளர்), கமலாவதி (டென்மார்க்), செல்வயோகநாதன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - சுவிட்சர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாரதிதாசன், தயாநிதி (ஓய்வுநிலை பிரதம எழுதுவினைஞர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), தங்கராசா, சந்திராவதி ஆகியோரின் பாசத்துக்குரிய மைத்துனரும் தக்ஷி, சிகானி, கிருஷகி, பிருந்தயன், சம்யுக்தா, கன்சிகா, கபிஷன், அபிலாசன், அய்ஷானி, பாருஜன், அக்சிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.11.2021) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-2980)

ஆயர்பாடி,
துன்னாலை மத்தி.

தகவல் :-
குடும்பத்தினர்

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயிலின் வடக்கு பிரதான வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (பலாலி வீதியிலிருந்து 600 மீற்றர் தூரமாகும்.)
தொடர்பு (8545)
077 623 4204
077 288 0152

வேலைக்கு ஆள் தேவை
பெண் தட்டெழுத்தாளர். தமிழ் + ஆங்கிலம் இரண்டும் கொம்பியூற்ரரில் தட்டச்சு செய்யத் தெரிந்தவராக இருக்க வேண்டும். ஊதியம், நேரம் நேரில் கதைக்கலாம்.
தொடர்பு (C-2971)
Whatsapp:- +41 77 924 63 14 only sms on Sunday & Tuesday.

Techno World
தொழில்நுட்ப கல்லூரி
TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD
வெலிங்டன் சந்தி லிங்கம் கூல்பார் அருகாமை
A/L 2023, 2021, 2022, Day class ஆகிய பிரிவுகளுக்கு Zoom Class மற்றும் நேரடி வகுப்பு ஆரம்பம்.
திகதி - 16.11.2021
காலம் - செவ்வாய் பிற்பகல் 3.30
அனுமதிகளை நேரடியாக வந்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
வேறு எங்கும் கிளைகள் கிடையாது.
தொடர்புகளுக்கு
077 017 5346 (C-2975)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் (8543)
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536
அருள்
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-2966)

பணிப்பெண் தேவை
வயோதிபப் பெண்மணிக்கு உதவியாளராக தங்கியிருந்து பராமரிக்க ஆரோக்கியமான பணிப்பெண் தேவை. தனியாட்கள் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் தரப்படும். வர விரும்புவோர் நேரடியாக தொடர்பு கொள்க. (தரகர் தேவையில்லை) (C-2977)
075 065 9212 (மகன்)
நெல்லியடி - வடமராட்சி

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம், புத்தூர், கோப்பாய், நெல்லியடி, கொடிகாமம், மானிப்பாய், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், கிளிநொச்சி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி (C-2918)
0768226240 DHL

IELTS DMI COMPUTER EDUCATION 0777 17 35 17
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General
IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக
புதிய பிரிவு ஆரம்பம் 10/11/2021 Wed 9:30 am
German - Germany, Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-2964)
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403
நெல்லியடி 021 226 2470 0777577333
சாவகச்சேரி 021 227 0775 0777227074
சுன்னாகம் 021 224 1970 0776032300
சண்டிலிப்பாய் 021 225 6665 0761354503
கிளிநொச்சி 021 228 5655 0776398096

நீங்களும் விரைவில் அமெரிக்காவில்.
அமெரிக்க அதிஸ்ட விசா
ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
55000 இலவச விசாக்கள்
0768226244
நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன (09-11-2021 செவ்வாய்க் கிழமை)
எம்மூடாக அமெரிக்கா சென்றவர்களில் சிலர் இவர்களைப்போல நீங்களும் அமெரிக்கா செல்ல உடனடியாக விண்ணப்பியுங்கள். (C-2919)
அமெரிக்கா விசா வெற்றியாளர்கள் V2 Travels
யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.